[1980 ஜூலை 16

வைகையின் கால்வாய்கள் மராமத்து

கு. கா. வி. 20 திரு. செ. சிவசாமி : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;—

(அ) வைகையின் இருமருங்கிலும் உள்ள கால்வாய்களும் அதன் தொடர்பு கண்மாய்களும் கடந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது இன்னும் மராமத்து நடைபெறவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், மராமத்து செய்ய என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) கடந்த வெள்ளத்தால் சேதமடைந்த கண்மாய்களை செப்பனிட சென்ற ஆண்டிலேயே நடவடிக்கை எடுக்கப்பட்டது. வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கடந்த வெள்ளங்களில் வைகையின் இரு மருங்கிலுள்ள கால்வாய்களில் சில பகுதிகள் சேதமடைந்தன. இப்பகுதிகள் ஆற்றை ஒட்டி செல்வதால், இவைகளின் ஒழுங்கை (alignment) மாற்றியமைக்க உத்தேசித்துள்ளது. இதுபற்றிய குறிப்புரை அரசின் ஆய்வில் உள்ளது.

கு. கா. வி. 21. திரு. க. பாரமலை : மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பெருவெள்ளம் காரணமாக வைகை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் வைகை ஆற்றின் இரு புறங்களிலும் அமைக்கப் பட்டிருந்த சேதமடைந்துள்ள கால்வாய்கள் மறுபடியும் புதுப் பிக்கும் வேலைகள் துவங்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தக் கால்வாய்களின் மூலம் தண்ணீர் பெற்று வந்த கண்மாய்களுக்கு மேற்படி கால்வாய்கள் சீர்படுத் தும் வரை மாற்று ஏற்பாடுகள் ஏதும் செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) சேதமடைந்த கால்வாய் பகுதிகளை சீரமைக்கும் வரை ஆற்றின் பிரதான மார்க்கம் வழியாக, பாசனத்திற்கு தேவையான நீர் வழங்கப்படும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வைகை மதுரை ஜில்லாவின் வடிகாலாக இருந்து கொண்டிருக்